**கூட்ட அறிக்கை**

70வது ஆண்டு நிறைவு - நாடு தழுவிய ரீதியிலான பொதுக்கூட்டம்

**பொதுக்கூட்ட அறிக்கை:** நோர்வே வாழ் தமிழர்களின் புலம்பெயர் வாழ்வில் 70வது ஆண்டு நிறைவு பற்றிய நாடு தழுவிய ரீதியிலான பொதுக்கூட்டம்

**அறிவிப்பு அனுப்புனர்:** 70 வது ஆண்டு நிறைவு நிர்வாகக்குழு, புலம்பெயர் சுவடிகள் காப்பகங்கள்

**கூட்ட அறிவிப்பு:** 70வது ஆண்டு நிறைவு - நாடு தழுவிய ரீதியிலான பொதுக்கூட்டம்.
**நாள்:** புதன்கிழமை 24.06.2026. வரவுப்பதிவு: 17:45. பொதுக்கூட்டம் நேரம்: 18:00- 20:00.

**இடம்:** Grorud auditorium, Grorud bydelshus

Kakkelovnskroken 3, 0954 Oslo

**ஒழுங்கமைப்பாளர்களில் சமூகமளித்தவர்கள்**

| |
|---|
| பகீரதி குமரேந்திரன் (நேரடியாக)<br>இணைப்பாளர், 70 வது ஆண்டு நிறைவு பணிக்குழு.<br>மாநகர சபைப் பணிக்குழு உறுப்பினர். |
| ஈஸ்வரன் அருள்குமார் (இணையவழியாக)<br>70 வது ஆண்டு நிறைவு பணிக்குழு உறுப்பினர்.<br>வடிவமைப்பு மற்றும் சந்தைப்படுத்தல் பணிக்குழு இணைப்பாளர்.<br>மாநகர சபைப் பணிக்குழு உறுப்பினர். |
| கோபால் விசுவலிங்கம் (இணையவழியாக)<br>புஸ்கருட் மாநில இணைப்பாளர். |
| டெனுஷா நகுலேஸ்வரன் (இணையவழியாக)<br>தொரண்லாங் மாநில இணைப்பாளர்.<br>70 வது ஆண்டு நிறைவு கலைக்குழு மற்றும் 70 வது ஆண்டு நிறைவு கலை மற்றும் கண்காட்சி பணிக்குழு உறுப்பினர். |
| விதுரன் விஜயராஜ் (நேரடியாக)<br>இலக்கியப் பணிக்குழு. |
| வத்சலா செந்தில்குமார் (இணையவழியாக)<br>மோர மற்றும் ரோம்ஸ்டால் மாநில இணைப்பாளர். |
| சாதுயா செல்லையா (இணையவழியாக)<br>70 வது ஆண்டு நிறைவு கலை மற்றும் கண்காட்சி பணிக்குழு உறுப்பினர். |
| கல்யாணி ருஷாந்த் (நேரடியாக)<br>70 வது ஆண்டு நிறைவு நிதிக்குழு உறுப்பினர். |
| சுதர்சன் சிறீரங்கநாதன் (நேரடியாக)<br>வடிவமைப்பு மற்றும் சந்தைப்படுத்தல் பணிக்குழு உறுப்பினர். |

எழுதப்பட்டது: 24.06.2026 முடிக்கப்பட்டது: 26.06.2026

## கூட்ட அறிக்கை

70வது ஆண்டு நிறைவு - நாடு தழுவிய ரீதியிலான பொதுக்கூட்டம்

| |
|---|
| தேனுகா சுதர்சன் (நேரடியாக)<br>70 வது ஆண்டு நிறைவு கலை மற்றும் கண்காட்சி பணிக்குழு உறுப்பினர். |

**மாநகர சபைப் பணிக்குழுவிலிருந்து சமூகமளித்தவர்கள்**

| |
|---|
| கஜன் சந்திரசேகரம் (நேரடியாக)<br>தொடர்பாளர், மாநகர சபைப் பணிக்குழு.<br>70 வது ஆண்டு நிறைவு நிதிக்குழு உறுப்பினர். |
| சுமதி விஜயராஜ் (நேரடியாக)<br>மாநகர சபைப் பணிக்குழு உறுப்பினர். |
| ஹரன்னி உமாகாந்தன் (நேரடியாக)<br>மாநகர சபைப் பணிக்குழு உறுப்பினர். |

**பங்கேற்பாளர்களின் மொத்த எண்ணிக்கை:** 42
**நேரடியாக:** 37
**இணையவழியாக:** 5

**பொதுக்கூட்ட தொகுப்பாளர்கள்:** சுதர்சன் சிறீரங்கநாதன் மற்றும் தேனுகா சுதர்சன்
**TEAMS நெறியாள்கை:** கல்யாணி ருஷாந்த்
**கேள்வி நேரம் நெறியாள்கை:** விதுரன் விஜயராஜ்
**கூட்ட அறிக்கை பதிவாளர்:** சுமதி விஜயராஜ்

**நிகழ்ச்சி நிரல்:**
17:45: நுழைவு. வருகைப்பதிவு மற்றும் சிற்றுண்டி பரிமாறல்
18:00: வரவேற்புரை
அகவணக்கத்துடன் பொதுக்கூட்டம் ஆரம்பம்
விடயம் 01: புலம்பெயர் தமிழ் சுவடிகள் காப்பகங்களை அறிமுகப்படுத்துதல்
விடயம் 02: 70-வது ஆண்டு நிறைவு ஒழுங்கமைப்பு மற்றும் 70-வது ஆண்டு நிறைவுக் குழுவை அறிமுகப்படுத்துதல்
விடயம் 03: ஒசுலோ நகர சபை நிகழ்வு மற்றும் மாற்று நிகழ்வு
விடயம் 04: நோர்வேயில் தமிழ் பண்பாட்டு பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான ஒழுங்கு
விடயம் 05: கேள்வி நேரம் - சமூகத்தின் கருத்துக்கள், அலோசனைகள் மற்றும் தேவைகள்

**பொதுக்கூட்ட அறிக்கை:**
நாடு தழுவிய ரீதியிலான பொதுக் கூட்டமானது மாலை 6 மணியளவில் சுதரசன், தேனுகா இருவரும் நிகழ்ச்சியை தொகுத்து வழங்க முன்வந்து முன்னுரையுடனும் அகவணக்கத்துடனும் பொதுக்கூட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

**கூட்ட அறிக்கை**

70வது ஆண்டு நிறைவு - நாடு தழுவிய ரீதியிலான பொதுக்கூட்டம் அனைத்துத் தலைமுறையினரும் புரிந்துகொள்ளும் வகையில், இந்தப் பொதுக்கூட்டம் முதன்மையாகத் தமிழ் மொழியில் சுதர்சனும் நோர்வேயிய மொழியில் தேனுகாவும் தொகுத்து வழங்கினார்.

முன்னுரையில் நோர்வேக்கு 1956ம் ஆண்டில் முதன் முதலாக வந்த அன்ரனி இராஜேந்திரம் அவர்கள் பற்றியும், வேலை நிமித்தமான புலம்பெயர்வு, கல்வி நிமித்தமான புலம்பெயர்வு, குடும்ப மீள் ஒன்றிணைவு நிமித்தமான புலம்பெயர்வு, ஈழப் போர் காரணமாக 1983ம் ஆண்டிலிருந்து 2009ம் ஆண்டு வரை அகதிகளாக புலம்பெயர்வு என்பன குறிப்பிடப்பட்டது. அந்த காலத்தில் வந்த தமிழர்கள் தமது அடையாளத்தை தாங்கி ஒரு முன்மாதிரியான இனமாக இருந்து இப்பொழுது 70வது ஆண்டில் அடியெடுத்து வைத்து ஒரு வரலாறைப் படைக்கின்றார்கள் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

## விளக்கக்காட்சி: 1 மற்றும் 2

தொடர்ந்து இரு விளக்க காட்சிகளை இணைப்பாளர் திருமிகு பகீரதி குமரேந்திரன் அவர்களால் வழங்கப்பட்டது. புலம்பெயர் தமிழ் சுவடிகள் காப்பகம் பற்றியும், இந்தப் பொதுக்கூட்டத்தின் நோக்கம் பற்றியும், நாடு தழுவிய ரீதியிலான 70 வது ஆண்டு நிறைவு ஒழுங்கமைப்பு பற்றியும் விளக்கம் கொடுக்கப்பட்டது.

- காந்தள் மலர் பற்றிய விளக்கம்.
- தமிழர்கள் நோர்வேயில் 70வது ஆண்டு பற்றி பலருக்கு வெளிப்படுத்தல்.
- 15 நோர்வே மாவட்டங்களில் இது பற்றிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளது.
- வரலாறுகளை திரிவுபடுத்தாமல் சரியான முறையில் வெளிக்கொண்டு வருதல்.
- 2017 இலிருந்து காப்பகத்தில் பதிவுகள் ஆரம்பமாகியுள்ளது, கடந்த வருடங்களை விட 70வது வருட காலம் என்பது எம்மவரில் பலரின் ஈர்ப்பினை பெற்றுள்ளது.
- சமூகத்தை தட்டிக்கொடுப்பது, அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருப்பது.
- தமிழர்கள் தங்களைத்தாங்களே பதிவு செய்கிறார்கள் (ஆவணப்படுத்துகிறார்கள்) ஆனால் இவற்றை காப்பகப்படுத்துவது முக்கியம்.

நாடு தழுவிய ரீதியிலான 70 வது ஆண்டு நிகழ்வு பெரியளவில் நடாத்தி தமிழர்களின் வரலாற்றையும் அடையாளத்தையும் வெளிப்படுத்துதல். இது பற்றிய பல தகவல்கள் பரிமாற்றம் மூலம் பகிரப்பட்டுள்ளது.

- 27.03.26 அன்று நாடு தழுவிய ரீதியிலான 70 வது ஆண்டு நிகழ்விற்கான நிர்வாக்குழு அமைக்கப்பட்டது.

எழுதப்பட்டது: 24.06.2026 முடிக்கப்பட்டது: 26.06.2026

**கூட்ட அறிக்கை**

70வது ஆண்டு நிறைவு - நாடு தழுவிய ரீதியிலான பொதுக்கூட்டம்

- இந்த நிகழ்வின் நிர்வாகக்குழுவில் இரண்டு விதிகளின் அடிப்படையில் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் உள்வாங்கப்பட்டனர். அதில் 2 வது தலைமுறை தமிழர்களாக இருக்க வேண்டும் என்பது ஒரு விதிமுறை ஆகும்.
- ஏனையப் பணிக்குழுக்களிலும் வளக் குழுகளிலும் பல தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள்
- நிகழ்வு சிறக்க தனிநபர்கள், அமைப்புகள், கலந்து கொண்டு, பங்களித்து, ஒருவரை ஒருவர் மதித்து ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்ற பதிவு மற்றும் ஒப்புதலுக்குப் பின்னரே தன்னார்வலர்கள் இணைக்கப்படுவார்கள்.
- கலைகளுக்கு பொறுப்பானவர்களின் பங்களிப்பும் தேவை.
- சில மாவட்டங்களில் தொடர்பாளர்கள் தேவை.
- அரசியல்வாதிகள் வளக் குழுவிற்குள் இணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

## விளக்கக்காட்சி: 3

கஜன் சந்திரசேகரம் அவர்களால் நகரசபை ஒழுங்குகள் (ஒசுலோ மாநகரசபை) பற்றி விளக்கம் கொடுக்கப்பட்டது. இவர் சோசலிச இடதுசாரிக் கட்சியின் உள்ளூர் அரசியல்வாதி ஆவார். மேலும் மாநகராட்சியில் 70-வது ஆண்டு நிறைவை அடையாளப்படுத்தும் பணிக்குழுவின் தொடர்பாளரும் ஆவார்.

70வது ஆண்டு நிகழ்வை நகரசபையில் செய்வதற்காக விண்ணப்பம் மே மாதம் கொடுக்கப்பட்டது. அதைப் பரிசீலிக்க மேலதிக விபரங்கள் கோரியுள்ளனர். அதாவது காலம், நிகழ்வின் நேரம், எவ்வளவு மக்கள், பங்களிக்கும் அமைப்புகள், போன்ற பல தகவல்கள் கேட்கின்றனர். நோர்வேயில் உள்ள அனைத்து அமைப்புகளும் சேரந்து, அதாவது தமது இலச்சினையுடன் (logo) சம்மதம் தெரிவித்தால் விண்ணப்பத்தை கோடை விடுமுறையின் பின்னர் மீண்டும் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான பணியில் சேர்ந்து வேலை செய்ய விரும்பியவர்கள் இணைந்து கொள்ளலாம்.

## விளக்ககாட்சி: 4

நோர்வே தமிழரின் புலம்பெயர் வரலாற்றையும் தமிழ் வரலாற்றுப் பாரம்பரியத்தையும் எப்படி பாதுகாப்பது? என்ற விளக்க காட்சியை இணைப்பாளர் திருமிகு பகீரதி குமரேந்திரன் அவர்களால் வழங்கப்பட்டது.

- சுய பதிவாக்குதலின் (self documentation) முக்கியத்துவம். இதற்கு தமிழ்ச்சமமூகம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
- நடமாடும் நூலகமாக முதல் தலைமுறைத் தமிழர்கள் வலம்வருகிறார்கள். அவர்களின் வரலாறுகளையும் பதிவாக்குதல் முக்கியம்.
- வரலாறு, அடையாளம் என்பதை ஒரு சமூகம் இழந்தால் அவர்கள் யார் என்ற கேள்விக்கு உட்படுத்தப்படுவர்.
- ஏனைய புலம்பெயர் நாடுகளும் இப்படியான காப்பகங்களை உருவாக்குவது அவசியம்.
- பதிவுகளை சேகரித்து அவற்றை காப்பகப்படுத்த உதவிகள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் எம்முடன் இணைந்து பணியாற்றலாம்.

## கேள்வி நேரம்:

கேள்வி நேரத்தை நெறிப்படுத்தியவர் விதுரன் விஜயராஜ்.
இவருடன், சுலக்சனா சிவபாதம், ஒசுலோ மாநகர சபைப் பிரதிநிதி.
கஜன் சந்திரசேகரம், சோசலிச இடதுசாரிக் கட்சியின் உள்ளூர் அரசியல்வாதியும் மாநகர சபையில் 70-வது ஆண்டு நிறைவை அடையாளப்படுத்தும் பணிக்குழுவின் தொடர்பாளரும்.
ஜீவன் சுவேந்திரன், 70 வது ஆண்டு நிறைவு கலை மற்றும் கண்காட்சிப் பணிக்குழுவின் தொடர்பாளர்களில் ஒருவர்.

விதுரன் : இங்கு கருத்துகள், கேள்விகள் உள்வாங்கப்பட்டு, கேள்விகளுக்கு பதில் தரப்படும்.

1. பாஸ்கரன்:

நீண்டகாலமாக இந்நிகழ்வு பற்றி யோசித்தேன், பகீரதி முன்னெடுத்ததில் சந்தோசம். இளையவர்கள் பங்கேற்பதில் சந்தோசம். நான் Oslo நகரசபையில் பிரதி உறுப்பினராக இருப்பதால் நகரசபையில் நிகழ்வு வைப்பதற்கான விண்ணப்பத்தினை “காலிட் முகமட்” என்பவரிடமும் உதவி கேட்கலாம். இதில் எவ்வளவு பேர் பங்குபற்றுவது என்பதை முடிவெடுக்க வேண்டும். நகரசபையில் உள்ள எல்லா கட்சிகளுடனும் இது பற்றி கதைக்க வேண்டும். இந்நிகழ்வை நன்றாக செய்து முடிக்க வேண்டுமாயின் பழைய பெரியவர்களை, வயதானவர்களை, அனைத்து அமைப்புகள், சங்கங்களை உள்வாங்கி இது பற்றி கதைப்பது முக்கியம். நகரசபை நிகழ்விற்கு எந்த மண்டபம், என்ன திகதி, எவ்வளவு பேர் பங்கு பற்றுவது என்பதை அறியப்படுத்த வேண்டும். இந்நிகழ்வை நோரவேயிய மட்டத்தில் கொண்டு போக அரசகுடும்பத்தை, அரசியல் பிரமுகர்கள், தேசிய தொலைக்காட்சி போன்றவற்றிற்கு அழைப்பு விடுக்க வேண்டும். 70வது வருடத்தில் தன்னும் ஒற்றுமையாக இந்நிகழ்வு நடாத்தப்பட வேண்டும் நகரசபையில் எப்படி செய்வது என்பதை முடிவு பண்ணுவது முக்கியம்.

2. கஜன்:

இந்த நகரசபை சம்பந்தமான முன்னெடுப்புகளில் பாஸ்கரன் தொடர்பில் இருந்து வருகிறார். இனியும் இதில் பங்களிக்க வேண்டும்.

3. விவேகானந்தன்:

ஒவ்வொருவரும் தமது வரலாற்றைப் பதிவு செய்வது முக்கியம். அமைப்புகளின் பொறுப்பானவர்களை கூட்டி இதன் நன்மைகளை கதைக்க வேண்டும்.

4. அனித்தா:

வாழ்த்துகள், இராசேந்திரம் அங்கிள் எனது அம்மாவின் தாய் மாமன், அவர் தமிழருக்காக பல வேலைகள் செய்துள்ளார். எங்களின் அடையாளத்தைப் பற்றியும், புலம்பெயர் வாழ்வு குறித்தும் எமது பிள்ளைகளுக்கும் அறியப்படுத்துவதும், ஆவணமாக இருப்பதும் அவசியம். தமிழர்கள் பற்றி நிறைய ஆய்வுகள் உள்ளது அத்துடன் தமிழரகள் super innvandrer ஆக இருக்கின்றார்கள்.

5. சீலன்:

தமிழச் சங்கம் ஆதரவை வழங்கும், எப்படி நடத்தப் போகிறீர்கள் என்பதை எழுத்து மூலம் அனுப்பினால் நல்லது. சுலக்சனா பதிலளிக்கையில் எல்லோரும் சேர்ந்து கதைத்து திட்டமிடுவது முக்கியம். நகரசபை முடிவு கிடைத்த பின் இது பற்றி விளக்கம் தரலாம் என பகீரதி பதிலளித்தார்.

6. கோபால் (இணையவழி மூலம்):

இந்நிகழ்வு பற்றி சந்தோசமாக உள்ளது. ஒத்துழைப்புகள் தரலாம். ஒவ்வொரு நிறுவனங்களும் தாம் செய்த திட்டங்களை ஆவணப்படுத்தி பாதுகாப்பது முக்கியம். இது பலபேருக்கு விளக்கம் இல்லை, விளங்கியவர்கள் தான் இதற்குள் வருவார்கள். எங்கள் வரலாற்றை பாதுகாக்க ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். பகீரதி ஆவணப்படுத்தும் செயற்பாட்டில் என்னத்தை எதிர்பார்க்கிறீர்கள்?

7. தயா:

நீண்டகாலமாக பகீரதி இந்த திட்டத்தை செய்வதை கேள்விப்பட்டேன். முழு நோர்வேயும் இதில் உள்ளடக்கப்படுவதும் புதியவர்கள் இத்திட்டத்தில் பங்குபற்றுவது நல்லது. அத்துடன் இது சம்பந்தமான திட்ட விளக்கம் நோர்வேயிய பெரும் சமூக மட்டத்திலும் வெளிப்படுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது. இதன் மூலம் அறிந்து என்னைத் தொடர்பு கொண்டனர். அதாவது Vardø வில் “Lille Eelam” என்ற படம் எடுப்பது பற்றி. மற்றும்

70வது ஆண்டு நிறைவு - நாடு தழுவிய ரீதியிலான பொதுக்கூட்டம்

இளையவர்கள் கூடுதலாக உள்ளடக்கியது நல்லது. இவர்கள் பழையவர்களை நாடி விடயங்களை சேகரித்து தேடல்களையும் செய்வது நல்லது. இந்த ஆவணப்பதிவு தொடர்ச்சியாக செய்வது நல்லது, இதற்கான உதவி எம் மூலம் எப்பவும் இருக்கும்.

8. ஹரினி:

நான் Rådhus குழுவில் இருக்கிறேன். வரலாறுகளை அறிந்து கொள்வதும் முக்கியமாக எமது பெற்றோர்களின் புலம்பெயர் வரலாற்றைக் கேட்டு அறிந்து கொள்ளல் முக்கியம். நான் நடனம் சம்பந்தமாக வெளிப்பாடுகளை செய்வதற்கு உதவ விரும்புகிறேன்.

9. சுமதி:

ஆரம்பத்தில் நாட்டிலிருந்து 20கிலோ சூட்கேசுடன் இங்கு வந்து பல இன்னல்களுக்கு மத்தியில் ஒரு நல்ல தமிழ் சமூகத்தை உருவாக்க ஒவ்வொரு தமிழ் மக்களும், பெற்றோர்களும் தமது பங்கை ஆற்றி உள்ளனர். இவர்களின் வரலாற்றை அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

10. அமரபாலா:

உண்மையாக இந்த ஆவணப்பாதுகாப்புத் திட்டம், 70வது ஆண்டு நிகழ்வு செய்வது நல்லது சந்தோசமாக உள்ளது. எமது அமைப்பான "உலகத் தமிழ் சதுரங்கம்" மற்றும் "Face" உதவியாக இருக்கும். இந்த திட்டத்திற்கு 5000kr களை இத்திட்டத்திற்கு தருகிறேன்.

11. வளர்மதி:

முன்பு தமிழர்களின் சார்பாக பல அமைப்புகள் தனியார்கள் தமது நேரத்தை விட்டுள்ளார்கள், இங்கும் வந்துள்ளனர், இவர்களிடம் ஒலி அமைப்பில் நேர்காணல்களை எடுத்து தந்தால் இவற்றை நான் எழுத்தில் செய்து தரமுடியும்.

12. டயஸ்:

பல இளையவர்கள் நன்றாக படித்து நல்ல வேலைகளில் நல்ல நிலைகளில் உள்ளார்கள் இவற்றையும் ஆவணப்படுத்துவது முக்கியம். அத்துடன் இவர்களை உள்வாங்குவது முக்கியம்

13. கல்யாணி:

ஆரம்பத்தில் வந்த தமிழர்கள், அமைப்புகள் தான் எமக்கு நாட்டுப்பற்றை ஏற்படுத்த காரணமாக இருந்தார்கள். நாம் முன்பு ஒரு குடைக்கு கீழ் இருந்தோம். தமிழருக்குள்

## கூட்ட அறிக்கை

70வது ஆண்டு நிறைவு - நாடு தழுவிய ரீதியிலான பொதுக்கூட்டம்

பிரிவுகளை உருவாக்கியுள்ளது. இவை இனி இருக்காது என நம்புகின்றேன். எனது நடனப்பள்ளி சார்பாக 2000kr களை இத்திட்டத்திற்கு தருகின்றேன்.

14. சேகர்:

வரலாறு தான் வழிகாட்டி, நினைவுகளே ஒரு சமூகத்தின் கேடயமாக உள்ளது. புத்தரின் போதனை 100 வருடத்திற்கு பிறகு தான் ஆவணமாக மாறியது, எனவே எம் வரலாற்றை ஆவணமாக்குவதற்கு காலம் போகவில்லை. உலகத்தில் சிறீலங்கா, சீனா நாடுகள் தான் வரலாற்றை எழுதியுள்ளனர். எனவே நாமும் எமது இனம் பற்றிய வரலாற்றை எழுதி ஆவணப்படுத்தி வைப்பது மிகவும் முக்கியம்.

15. நவாஸ்:

இதில் யாவரும் பங்கு பற்ற வேண்டும். யாவருக்கும் அறிவித்தல் கொடுக்க வேண்டும். இது பற்றி பல தனிநபர்கள் மற்றும் அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டது என்று பகீரதி கூறினார்.

16. கண்ணன்:

தமிழ் மீடியா இந்த திட்டம் நல்ல விடயம், ஒத்தாசைகள் இருக்கும். 5000kr களை திட்டத்திற்காக தருவதாக கூறினார்.

17. வத்சலா:

இணையவழி மூலம். தமது Ulsteinvik மகளிர் அமைப்பு, எமது செயற்பாடுகளை ஆவணப்படுத்துவது விருப்பம், யாருடன் தொடர்பு கொள்வது? பகீரதியுடன் தொடர்பு கொள்ளும்படி கூறப்பட்டது.

18. சுலக்சனா:

September முதல் கிழமை bystyre கூட்டம் அதற்க்கு முதல் விண்ணப்பம் கொடுக்க வேண்டும், அதற்க்கு எல்லோரும் சேர்ந்து நோக்கம், காலம், நேரம் போன்ற பலவற்றை திட்டமிட வேண்டும். இது ஒரு நல்ல முயற்சி. அனைத்து கட்சிகளுடன் கதைக்க வேண்டும். தற்போது நானும் பாஸ்கரனும் தான் நகரசபையில் இருக்கின்றோம். இந்த திட்டத்தை சரியான முறையில் செய்ய நிதியும் முக்கியம்.
பகீரதி 7000kr+2000kr களுடன் தான் ஆரம்பிக்கப்பட்டது என்பதை கூறினார்.

19. ஜீவன்:

எழுதப்பட்டது: 24.06.2026 முடிக்கப்பட்டது: 26.06.2026

**கூட்ட அறிக்கை**

70வது ஆண்டு நிறைவு - நாடு தழுவிய ரீதியிலான பொதுக்கூட்டம்

நிறைய நல்ல விஷயங்கள் வெளிவந்துள்ளது. அனைவரினதும் உதவிகளும் தேவை. முதலில் ஒரு திகதியை முடிவெடுக்க வேண்டும், இதை யாவருக்கும் வெளிப்படுத்தப்படும்.

20. பகீரதி - இத்திட்டத்திற்கான தேவைகள்:
    - ஒத்துழைப்புத் தரும் அமைப்புகளின் பெயரும் Logoவும் ஒப்புதலும் தேவை. எழுத்து மூலம் இவற்றை அனுப்பி வைக்க வேண்டும்.
    - இந்த 70வது ஆண்டு நிகழ்விற்கு நிதிப் பங்களிப்பும் தேவை.
    - பலருடன், அமைப்புகளுடனும் இதுபற்றி பல கூட்டங்கள், உரையாடல்கள் நடைபெற்றுள்ளது, தொடர்ந்தும் தேவையேற்ப்படின் தொடர்புகளை ஏற்படுத்தி விளக்கம் கொடுக்கலாம்.

இன்றைய தகவல் கூட்டத்தில் பல ஆர்வலர்கள் பங்கு பற்றினார்கள். அனைவரது வேண்டுகோளும் ஒற்றுமையாக 70 வது ஆண்டினை வெளிக்கொண்டு வரவேண்டும். தமிழர்களின் வரலாறுகளை ஆவணப்படுத்துவது முக்கியம் என்ற கருத்துடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

குறிப்பு: பங்கு பற்றியவர்களுக்கு தேநீரும், வடையும் பகிரப்பட்டது.

**கூட்ட அறிக்கை**

70வது ஆண்டு நிறைவு - நாடு தழுவிய ரீதியிலான பொதுக்கூட்டம்

**பொதுக்கூட்டத்திற்கு நேரடியாக சமூகமளித்தவர்கள்:**

Kasinathan Nirmalanathan
Subramani Iyar Ananthakrishnan
Vasathny M. Francis
Saratha Parameswaran
Sumathi Wijeyaraj
Thajashkanth Tharmarajah
Kanthasamy Chandraseelan
Balasingam Yogarajah
Arumugam Vivekananthan
Santhy Kumarendiran
Tenuka Sutharsan
Kalyani Rushanth
Sauundaladevy N.
Subashanthy Balenthiran
Vhalarmathe D.
Thileepan Nagalingam
Sinnathurai Umapalan
Nadanasigamani Balenthiran
Gajaen Chandrasegaram
Thuyavan
Kalyani Sivagnanam
Thayaparan Nagalingam
Kiddinan Namasivayam
Anita Jeyananthan
Amirthini Wimalarasan
Kannan Nadarajah
Jana Aiyadurai
Kandiah Segar
Ragul Vivekanthan
Thamilarasi
Jeyanthy
Anton Amarapalan
Haranni Umakanthan
Sulaksana Sivapathan
Baheerathy Kumarendiran
Withuran Wijayaraj
Sutharshan Sriranganathan

**பொதுக்கூட்டத்திற்கு இணையவழியாக சமூகமளித்தவர்கள்:**

Denusha Naguleswaran
Kobal Visvalingam

**கூட்ட அறிக்கை**

70வது ஆண்டு நிறைவு - நாடு தழுவிய ரீதியிலான பொதுக்கூட்டம்

Watshala Senthilkumar
Eswaran Arulkumar
Sathuya Selliah